**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலை கலாசார பீடம் /புவியியற்துறை**
**இரண்டாம் வருட 2ஆம் அரையாண்டு சிறப்பு/பொதுக் கலைமாணித் தேர்வு**
**2010/2011 (Aug./Sept.2013)**

| | |
|---|---|
| **OCC 2201: அனர்த்தங்களைக் கையாளுதல்** <br> **(Dealing with Disasters)** | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- எவையேனும் **நான்கு(04)** வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.

**1)**

i. அனர்த்தம் (Disaster), இடர் (Hazard) ஆகிய இரு பதங்களையும் வரையறுக்குக.
(05 புள்ளிகள்)

ii. மேலே உம்மால் வரையறுக்கப்பட்ட இரு பதங்களும் ஒன்றிலிருந்து ஒன்று எவ்வாறு வேறுபடுகின்றது? அத்தகைய வேறுபாட்டை யாதேனும் ஓர் நிகழ்வினை உதாரணமாகக் கொண்டு தெளிவுபடுத்துக.
(08 புள்ளிகள்)

iii. புவிப் பௌதீக அனர்த்தங்களை வகைப்படுத்தி, அவற்றின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் புவியின் உட்பாகச் செயன்முறை குறித்து விளக்குக.
(12 புள்ளிகள்)

**2)**

i. சுனாமி நிகழ்வு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் நலிவுறு நிலையில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் ஆபத்தைக் குறைப்பதற்கு உம்மால் முன்வைக்கக்கூடிய உபாயங்கள் யாது?
(05 புள்ளிகள்)

ii. நீர் முன்வைத்த உபாயங்களால் எவ்வாறு குறித்த சமுதாயத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் எனக் கருதுகின்றீர்? தெளிவுபடுத்துக.
(08 புள்ளிகள்)

iii. "அனர்த்த நிகழ்வு ஒன்று குறித்த பிரதேசத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்களின் தன்மையானது அந்நிகழ்வில் மட்டும் தங்கியிருப்பதில்லை" அவ்வாறாயின் அதனுடன் தொடர்புடைய காரணிகளை அடையாளம் கண்டு, விளக்குக.
(12 புள்ளிகள்)

**3)**

i. அனர்த்த முகாமைத்துவம் என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(05 புள்ளிகள்)

ii. குறித்த ஒரு பிரதேசத்தில் அனர்த்த முகாமைத்துவ உபாயங்களை முன்னெடுக்கின்ற பொழுது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய பிரதானமான விடயங்கள் யாவை?
(08 புள்ளிகள்)

iii. அனர்த்த முகாமைத்துவச் சக்கரத்தில் உள்ளடங்கும் ஒவ்வொரு கட்டங்களையும் வரையறுத்து, இலங்கையில் அதன் நடைமுறைச் சாத்தியம் குறித்து பரிசீலிக்குக.
(12 புள்ளிகள்)

4)

i. இலங்கைக்குச் சாத்தியமான அனர்த்தங்களைக் குறிப்பிட்டு, அவற்றினால் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

ii. "இலங்கையில் அனர்த்தக் கல்வி அவசியமானது" அதற்கான பின்னணியை ஆராய்ந்து, அதன் இன்றைய போக்கு, எதிர்காலத் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

5) "சூறாவளிகள் மூலமான அனர்த்தங்கள் காற்று வேகம் அதிகரிப்பதனால் மட்டுமன்றி கடுமையான மழைப் பொழிவின் விளைவால் உருவாகும் வெள்ளப்பெருக்கினாலும் ஏற்படுகின்றது" இக் கூற்றினை உதாரணங்கள் தந்து ஆராய்க.

(25 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி விளக்கக் குறிப்புரை தருக

i. அனர்த்த முன்னெச்சரிக்கை ஒழுங்கு.

ii. வரட்சி அனர்த்தத்தினால் ஏற்படும் சமூக, பொருளாதார, சூழலியல் தாக்கங்கள்.

iii. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம்.

(12.5x2=25 புள்ளிகள்)